14-5-1991

இலங்கை அரசுடன் **ராஜீவ் கடும்போக்கை கடைப்பிடிப்பாராம்!**

(பாரிஸ்)
இந்தியாவில் இந்திரா காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், ராஜீவ் காந்தி இலங்கை அரசுடன் கடுமையான போக்கை மேற்கொள்ளக்கூடுமென்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.
ராஜீவ் காந்தி இந்தியாவின் பிரதமராக இருந்தபோது இலங்கைக்கு அனுப்பப்பட்ட
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

பனி: 88 சித்திரை 30 [illegible] 27 இதழ்: 92
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 13-5-1991

## புலிகள்-இராணுவம் சமர்

(அம்பாறை)
அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.
தம்பிலுவில் நோக்கி விடுத
(4-ம் பக்கம் பார்க்க)

## ஹெலியிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம்

(யாழ்ப்பாணம்)
நீர்வேலி-சிறுப்பிட்டி பகுதியில் நேற்று மாலை 4-45 மணியளவில் ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.
பொதுமக்களை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாயினும் ஏற்பட்ட சேதவிபரம் பற்றிய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. (ச)

# தேர்தல் முறைகேடுகள் குறித்து பிரிட்டிஷ் தூதர் பெரும் அதிருப்தி

## இலங்கையின் உள்விவகாரத்தில் தலையிடுவதாக அரசு ஆவேசம்!

(கொழும்பு)
உள்ளூராட்சி சபை தேர்தலில் திக்வெல என்னுமிடத்தில் இடம்பெற்ற தேர்தல் முறைகேடுகள் குறித்து இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதர் திரு. டேவிட் கிளஸ்ரோன் பெரும் அதிருப்தியடைந்துள்ளார். இந்த முறைகேடுகள் குறித்து அவர் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார் எனவும் அறியவருகிறது.

இலங்கையின் உள்விவகாரத்தில் பிரிட்டிஷ் தூதர் அவசியமில்லாமல் தலையிடுவதாக இலங்கை அரசு ஆவேசமடைந்துள்ளது.

திக்வெல என்ற இடத்தில் ஐக்கியதேசியக்கட்சி தொண்டர்கள் தேர்தல் மையக் கையிலிருந்து அழித்து முறைகேடுகளில் ஈடுபட்டதாக திரு: டேவிட் கிளஸ்ரோன் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.
பிரிட்டிஷ் தூதரின் மேற்
(4-ம் பக்கம் பார்க்க)

### வாக்களிப்பில் 141 சட்டமீறல்கள்

(கொழும்பு)
நேற்று முன்தினம் நடைபெற்ற உள்ளூராட்சி சபை தேர்தல் வாக்களிப்பின்போது 141 தேர்தல் சட்ட மீறல் சம்பவங்கள் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்,
ஆள் மாறாட்டம், அச்சு
(4-ம் பக்கம் பார்க்க)

### நால்வர் கைது

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த பாலைபடி வெட்டை முகாமை சேர்ந்த இராணுவத்தினர் கடந்த 10-ம் திகதி காலை 10 மணியளவில் காக்காச்சிவெட்டை அகதிமுகாமை சுற்றி வளைத்து நான்கு தமிழ் இளைஞரை கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றுள்ளனர். இவர்களின் நிலைபற்றிய எதுவித தகவலும் இதுவரை
(4-ம் பக்கம் பார்க்க)

## 237 உள்ளூராட்சி சபைகளில் 190 சபைகளை ஐ. தே. க. வென்றது 36 இடங்களை சுதந்திரக் கட்சி பெற்றது

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு மாவட்டங்களைத் தவிர, 17 மாவட்டங்களில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் ஐக்கிய தேசியக்கட்சி அமோக வெற்றிபெற்றது.
மொத்தம் 237 உள்ளூராட்சி சபைகளுக்கு நடைபெற்றதேர்தலில் ஐ. தே. க. 190 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 36
(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மாநகரசபை: 30 ஐ.தே. அங்கத்தவர் தெரிவு

(கொழும்பு)
கொழும்பு மாநகர சபைக்கு ஐக்கிய தேசிய கட்சி சார்பில் 30 அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.
ஐ. தே. கவுக்கு மொத்தம் ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 798 வாக்குகள் கிடைத்தன,
(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழர்பிரச்னைக்கு தீர்வுகாண தேர்தல்வெற்றிவழிவகுக்கும்

(கொழும்பு)
வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நிலவிவரும் பிரச்சனையை சுமுகமான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைப்பதற்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு இப்போது நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.
உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்திருக்கும் அமோக வெற்றியின் மூலம் ஜனாதிபதிக்கு இச்சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாக அரசியல்
(4-ம் பக்கம் பார்க்க)

### தேர்தல் பந்தயம்

(கொழும்பு)
தென்னிலங்கையில் யானைகள், பசுக்கள், குளிரூட்டப்பட்ட கார்கள் போன்றவை அரசியல்கட்சிகளின் ஆதரவாளர்களால் தேர்தல் பந்தயமாகப் பிடிக்கப்பட்டதாம்.
இரத்தினபுரி போன்ற பகுதிகளில் இரத்தினக்கல் உட்பட பல பெறுமதியான பொருட்கள் தேர்தல் பந்தயமாகப் பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

## மலையகத்தில் இரு சபைகளை இ.தொ.கா. கைப்பற்றியது

(கொழும்பு)
உள்ளூராட்சி தேர்தலில் இரு இடங்களில் மாத்திரம் போட்டியிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி இரு இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கிறது.
இ: தொ. கா. அம்பகமுவா தொகுதியில் 30 ஆயிரத்து 190 வாக்குகளைப் பெற்று 14 இடங்களையும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 6 இடங்களையும், சுயேட்சைக் குழுக்கள் 3 இடங்களையும் பெற்றன.
மற்றொரு நுவரேலியாப் பகுதியில் இ: தொ. காங்கி
(4-ம் பக்கம் பார்க்க)

## படையினர் நடவடிக்கையால் மீனவர் விவசாயிகள் பாதிப்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வாகனேரிக் குளத்தில் மீன்பிடித்து தமது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த கடற்றொழிலாளர்களை சிறிலங்கா இராணுவத்தினர் மீன்பிடிக்க வேண்டாமென தடுத்துள்ளதினால் 50 க்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் வாகனேரி குளத்தை விட்டு வேறு பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளன.
(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா-மன்னார் வீதியில் 30 நிமிடம் மோதல்

(கொழும்பு)
வவுனியா-மன்னார் வீதியில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்குமிடையில் நேற்று முன்தினம் கடும் மோதல் இடம்பெற்றதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.
சுமார் முப்பது நிமிடங்கள் நடைபெற்ற இச்சண்டையில் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.
இதேவேளை வவுனியா வடக்கு வடமேற்கு பகுதிகளிலுள்ள காட்டுப் பகுதிகளில் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் சண்டைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது; (ரி)

## காரைநகரில் தங்கியுள்ள 2000க்கும் அதிகமானோர் நிலைபற்றி தகவல் இல்லை

(யாழ்ப்பாணம்)
காரைநகரினுள் சிக்கியுள்ள 2000 த்துக்கும் மேற்பட்ட பொதுமக்களின் நிலைகுறித்து இதுவரை எந்தவித தகவலும் கிடைக்கவில்லை.
காரைநகரின் உள்ளே எவரும் செல்ல முடியாத நிலையிலும் அங்கிருந்து எவருமே
(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

அதிசக்திவாய்ந்த மில்க் வைற் திரவ சவர்க்காரம் வீட்டுச் சலவைக்கும், ஏனைய சுத்திகரிப்பு வேலைகளுக்கும் இலத்தரசிகளுக்கு உதவுகிறது. எங்கும் கிடைக்கிறது மில்க்வைற், யாழ்ப்பாணம். (எ1286)

### சோபிதா புத்தகசாலை

உங்கள் குழந்தைகளின் பாடநூல்களையும், அப்பியாசக் கொப்பிகளையும், பாடசாலை உபகரணங்களையும், கதை, கட்டுரை, கவிதை நூல்களையும் விருப்பம்போல் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்: சோபிதா புத்தகசாலை, 363, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 4669)


# வீடுகள் தகர்ப்பு

## சொத்துக்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவம் அண்மையில் சரவணைக் கிராமத்தில் பலவீடுகளையும், சொத்துக்களையும் சேதப்படுத்தியுள்ளது.

சரவணை மேற்கைச் சேர்ந்த சி. நித்தியானந்தம், அ தெட்சணாமூர்த்தி, சுப்பிரமணியம் [ஆசிரியர்] ஆகியோரின் வீடுகள் தகர்க்கப்பட்டும், க. சந்தசாமி, ச. வன்னியசிங்கம், கு. குழந்தைவேலு, கு. சுப்பிரமணியம் ஆகியோரின் வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன என்று அவ்விடத்திற்குச் சென்று திரும்பியவர்கள் கூறுகிறார்கள். (152)

# தீவுப்பகுதி ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டுள்ளன

(வேலணை)

தீவுப்பகுதியில் உள்ள சகல அரசினர் வைத்தியசாலைகளும் கடந்த 16 தினங்களாக மூடப்பட்டுக் கிடக்கின்றன.

வேலணை, புங்குடுதீவு, மண்டைதீவு, வேலணையில் இயங்கிவந்த ஊர்காவற்றுறை வைத்தியசாலைகள் என்பனவே மூடப்பட்டுக் கிடக்கும் வைத்தியசாலைகளாகும். [75]

# வீடுகள் இன்றி

## வெளியாகத் தென்படுகிறது

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பகுதியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கையால் சரவணைச் சந்தியிலிருந்து புளியங்கூடல் சந்திவரை வீடுகளின்றி வெளியாகத் தென்படுகிறதாம்.

இங்குள்ள வீடுகள் தகர்க்கப்பட்டும், எரியுண்ட நிலையிலும் காணப்படுவதாக தமது வீடுகளைப் பார்க்கச் சென்று திரும்பிவந்தவர்கள் தெரிவித்தனர்.

நூற்றுக்கும்மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (59)

# உலகில் 200 கோடி மக்கள் மலேரியாவினால் பாதிப்பு

(வாஷிங்டன்)

உலகில் சுமார் 200 கோடி மக்கள் மலேரியா நோயினால் பாதிக்கப்படுவதாக ஐ. நா. ஸ்தாபன சுகாதாரப் பணியகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

ஆபிரிக்காவில் மட்டும் 10 கோடி மக்கள் மலேரியாநோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் ஆசிய நாடுகளும் குறிப்பாக இலங்கை, இந்தியா, ஆப்கானிஸ்தான், பர்மா, சீனா போன்ற நாடுகளும் மலேரியா நோயின் தாக்கத்திற்குட்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கை மேலும் தெரிவித்துள்ளது. (ஸ)

## உப்பளத்தில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

நவாலி - கல்லுண்டாய் வெளியில் இயங்கும் உப்புக் கூட்டுத்தாபனத்தில் அஸ்பஸ்டாஸ் சீற், பலகை, தகரம் உட்பட பல பெறுமதி வாய்ந்த பொருட்கள் அண்மையில் களவாடப்பட்டுள்ளன.

கடந்த ஒரு வருடகாலமாக இவ் உப்புக்கூட்டுத்தாபனம் இயங்காமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. (ஸ)

## சங்கிலி யாருடையது!

[பருத்தித்துறை]

புலோலிப் பகுதி வீதியொன்றில் இளைஞரொருவரால் தங்கச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு பருத்தித்துறையில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சங்கிலியைத் தவறவிட்டவர் சரியான ஆதாரங்களுடன் நிரூபித்து தவறவிட்ட தனது தங்கச் சங்கிலியைப் பெற்றுக்கொள்ளலாமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (52)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சேர். பொன். இராமநாதன் ஸ்தாபித்த யாழ் பல்கலைக்கழக ஸ்ரீபார்வதி அம்பாள் சமேத பரமேஸ்வரன் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் ஜூன் மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நடைபெறவிருக்கிறது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெற்று பூர்த்தியன்று 1008 சங்காபிஷேகமும் நடைபெறவிருக்கிறது. (153)

# கஞ்சா விற்பனையாளர் நால்வர் புலிகளால் கைது

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் பகுதியில் சட்டவிரோத கஞ்சா விற்பனையிலும் பாவனையிலும் ஈடுபட்டுவந்த நால்வர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியை சேர்ந்த திரு அத்தார் தலைமையில் புலிகளால் கைது செய்யப்பட்டு கடும் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

சட்டவிரோத கஞ்சா அபின் போன்றவற்றின் பாவனையால் தவறான வழிகளை நாட எத்தனிப்பதுடன் சமூகத்திற்கும் பலவித கெடுதல்கள் ஏற்படுவதாகவும் குறிப்பிட்ட திரு. அத்தார் இளைஞர்கள் நல்வழிகளை நாடவும் விடுதலையில் பங்குபெறவும் முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (83)


## உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

### பொதுமுகாமையாளர் 101/7

# பதவிக்கான விண்ணப்பம்

உடுப்பிட்டி ப. நோ. சங்கத்தில் மேற்காண் பதவிக்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவிக்கான விண்ணப்பங்கள் 23-5-91ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் சங்கப் பணிமனையில் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலிலோ நேரிலோ தலைவர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், வல்வெட்டித்துறை என்னும் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

01. கல்வித் தகைமைகள்

அ: கூட்டுறவு ஊழியர் 8வது சம்பளத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்தில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 9வதுசம்பளத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்தில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட பட்டம் அல்லது சமமான தகுதிகளுடன் நான்கு வருடங்களுக்கு குறையாத முகாமைத்துவ அனுபவம் (அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தில்/கைத்தொழில் நிறுவனத்தில்) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இ: கூட்டுறவுப் பணியாளர் (உயர்பிரிவு) தராதரப் பத்திரம் அல்லது க. பொ. த (உயர்பிரிவு) பரீட்சையில் மூன்று பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம்/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் ஆறுவருடங்களுக்குகுறையாத முகாமைத்துவ அனுபவம்

02. வயது:

25 வயது தொடக்கம் 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

03. சம்பள அளவுத் திட்டம்:

1105/- 2170/- ——————— மும் அங்கீகரிக்கப்பட்ட
60X4 - 75X11 படிகளும்

முக்கிய குறிப்பு:

1. சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்களினதும் அனுபவ சான்றிதழ்களினதும் கல்விச் சான்றிதழ்களினதும், பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தினதும் பிரதிகள் யாவும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.
2. விண்ணப்பப் படிவங்களை சங்கப்பணிமனையில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்.
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

(எ-1291)


## இராசி பலன்

13-05-1991

திங்கட்கிழமை

சதுர்த்தி: பி. ப. 12·51 வரை. அச்சுவினி: காலை 7.41 வரை. இராகுகாலம்: காலை 7. 24 முதல் 3 24 வரை. சுபநேரம்: காலை 11.54 முதல் பகல் 1.24 வரை. அமாவாசை விரதம்.

மேஷம்: தொழில் துறை முதலீடு, பணவசதி, குடும்ப மகிழ்ச்சி.

இடபம்: குடும்பக் கவலை. இனசனபகை, காரிய அலைச்சல்.

மிதுனம்: தாய்வழிநினைவு, விருந்துபசாரம், தொழில் சிறப்பு.

கடகம்: சகோதர உதவி, புத்திரர் பாராட்டு, உல்லாசம்.

சிங்கம்: மறைமுகநட்பு. வாக்கு கலகம், தொழில் கஷ்டம்.

கன்னி: அதிகயோசனை, குறைகேட்டல், குடும்ப மோதல்.

துலாம்: சுபகாரிய செலவு, குடும்பசிறப்பு, வாக்கு மேன்மை.

விருச்சிகம்: அதிகாரிகள் பாராட்டு, தொழில் லாபம், புதியசிந்தனை.

தனுசு: இனசனப்பகை, தொழில் போட்டி. மனக்குழப்பம்.

மகரம்; உடல் சோர்வு. மறைமுக தொல்லை, அதிஷ்ட வாய்ப்பின்மை.

கும்பம்: தற்பெருமை, தவறான போக்கு. குடும்ப பகை.

மீனம்: வயிற்றில் ரோகம், மனக்குறை, அவமதிப்பு.

: ஜோஸ்யர்

# வடபிரதேச போக்குவரத்து ஊழியர் மன்னார், வவுனியாவுக்கு இடமாற்றம்

(சித்தன்கேணி)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை சாலைகளில் இருந்து ஊழியர்கள் வவுனியா மன்னார் சாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை சாலைகளில் இருந்து சாலைப்பரிசோதகர்கள், பொறியியல் பகுதி ஊழியர்கள் ஆகியோர் வவுனியா, மன்னார் சாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் தொடக்கம் வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு வேதனம் எதுவும் வரை வழங்கப்படவில்லை.

## வாகன விபத்தில் 9 பேர் பலி 6 பேர் காயம்

(சென்னை)

சேலம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் லொறி ஒன்றும் வான் ஒன்றும் நேருக்குநேர் மோதியதில் 6 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். 9 பேர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஸ)


## Accountancy Classes

### NOV. - DEC. 1991

**C. I. M. A.**

Stage I — 18 th May 1991
Stage II — 1 st June '91

**A. A. T.** (London)

Stage I — 18 th May '91
Stage II — 1 st June '91
Stage III — 1 st June '91

**A. A. T.** (Sri Lanka)

Stage I — 18 th May '91
Stage II — 1 st June '91

**I. A. B.** (Foundation) — 18 th May '91
Inter — 18 th May '91
Finals — 1 st June '91

மேலதிக விபரங்களுக்கு:

## NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. Peters Lane,
HOSPITAL ROAD, JAFFNA.

(எ 1298)

# ★ இலங்கைத் தமிழர் பிரச்னை தி.மு.கவோ அ.தி.முகவோ அனுதாபம் காட்டுவார்கள் என எதிர்பார்க்க முடியாது!

இலங்கையில் ஈழத்தமிழர் பிரச்னையென்று ல தமிழகத்தில் சோகம் பிறப்பதை விட ஒரு விரக்தியும், சலிப்பும் ஏற்படுவதைக் காணமுடிகிறது.

இலங்கையில் தினம் தினம் அப்பாவித் தமிழர்கள் மடிவதைக்கூட இந்தியத் தகவல் தொடர்புச் சாதனங்கள் சரியாக எடுத்துரைப்பதில்லை.

## இலங்கைப் பிரச்சனை

இலங்கைத் தமிழர் பிரச்னை என்பது இலங்கைப் பிரச்னை என்று தமிழக மக்கள் நினைக்கின்றார்கள் உள்ளது.

இதிலிருந்து இலங்கைப்பிரச்சனையில் தி. மு. கவின் அனுதாபம் ஈடுபாடு எவ்வளவு என்பதனை நாம் அறிந்து கொள்ள முடியும்.

தி மு கவிற்கு இலங்கைப் பிரச்சனையைத் தீர்க்க கிடைத்த வாய்ப்புகள் போல இன்னொரு வாய்ப்பு தி. மு க. விற்கு இனிக் கிடைக்குமா என்பது சந்தேகமே.

தமிழகத்தில் தி. மு. க ஆட்சி மத்தியில் தேசிய முன்னணி ஆட்சி என மாநில மற்றும் மத்திய அரசுகளின் அதிகாரம் கையிலிருந்தபோதும் பகுதியில் மாத்திரம் இலங்கை பற்றிக் கூறியுள்ளது.

அது பின்வருமாறு கூறுகிறது; தமிழகத்தில் இலங்கைப் போராளிக் குழுக்களின் வன்முறைச் செயலுக்கும் சமூக விரோதக் காரியங்களுக்கும் தி. மு. க. அரசும் தி மு க.வும் தனது கண்டனத்தை அவ்வப்போது தெரிவித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ள அதேநேரத்தில் தமிழீழத்து மக்களின் உரிமைகளை நசுக்கும் போக்கை எதிர்த்து எழுப்பப்படும் எந்தக் குரலையும் தி. மு. க. ஆதரிப்பதுடன் தமிழீழத்தில் உரிமையுடன்கூடிய அமைதி நிலவிடவும் தமிழ் நாட்டிற்கு வந்திருக்கும் இலட்சக்கணக்கான ஈழத்தமிழ் அகதிகள் இலங்கை திரும்பிச் செல்வதற்கேற்ற சுமுகசூழலை ஏற்படுத்தவும் இந்திய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம்''

தமிழக ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற தனது சுய நலத்திற்காக போராளிப் பிரச்னையை முன்வைத்ததன் மூலம் ஜெயலலிதாவின் இரட்டை வேடம் வெளியானது. ஜெயலலிதாவிற்கு இலங்கைத்தமிழர் விடயத்தில் அனுதாபம் உள்ளதா என்பது கேள்விக்குறி ஆனால் அ. தி. மு க. தேர்தல் அறிக்கையில் இலங்கைத் தமிழர் பிரச்னையை தீர்ப்பதற்கு புதிய கௌரவ ஒப்பந்தம் என்று இலங்கை அரசுடன் உருவாகவும் தமிழர் இன்னல் தீரவும் தீவிரநடவடிக்கை எடுக்கவும் இலங்கை தமிழர் கொலைப்படுவதனைத் தடுக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது:

இதேவேளை தீவிரவாதிகள் இம்மாநிலத்தை தளமாகப் பயன்படுத்தி தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டாது.

அ தி. மு. கவின் தேர்தல் அறிக்கையும் இலங்கைப் பிரச்னையை ஓர் ஊறுகாய் போல்தான் தொட்டுச் சென்றுள்ளதே தவிர பிரச்சனையின் ஆழத்தைப்புரியவோ அனுதாபப்படவோ செய்யவில்லை.

ஆகமொத்தத்தில் தி. மு. க. வும் அ. தி. மு. க. வும் யார் ஆட்சிக்கு வந்தாலும் இலங்கைத் தமிழர் பிரச்சனையில் இவர்கள் அனுதாபம் காட்டுவார்கள் என நாம் எதிர்பார்க்கமுடியாது.

---

**வெரித்தாஸ் வானொலி நேற்று முன்தினம் ஒலிபரப்பிய 'உண்மையின் எண்ணங்களில்' வெளியான சில பகுதிகளை இங்கு தருகின்றோம்.**

## கருணாநிதி நிலை

தி. மு க. தலைவர் மு கருணாநிதி ஒரு தடவை ஈழத் தமிழர் பிரச்சனையை முன் வைத்துத் தமது சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார்.

இப்போது இலங்கைப் பிரச்சனையைப் பெரிதுபடுத்தித் தேர்தல் பிரச்சாரம் செய்யாமலிருக்கிறார் என்றால் தமிழக மக்களின் மனப்போக்கை அவர் புரிந்திருக்கிறார் போலும்.

இலங்கைப் பிரச்னை குறித்துத் தேர்தலில் பேசினால் அதற்கு வாக்குகள் கிடைக்காது என தி. மு. க. நினைக்கக் கூடும்.

## தி. மு. கவின் ஈடுபாடு

சட்டமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சனையினை தி. மு. க. தமிழ்நாடு வாக்காளர்களிடம் வைக்காமலிருப்பது ஆச்சரியமாகவே இலங்கைப் பிரச்சனைக்குத் தீர்வு காண முன்னாள் இந்திய பிரதமர் வி. பி சிங் கருணாநிதியிடம் பொறுப்பை ஒப்படைத்த பின்பும் இதுவரை பிரச்சனையைத் தீர்க்கும் அளவிற்கு அவர் எதையும் சாதித்துவிடவில்லை.

கருணாநிதி இலங்கை அரசுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்திவிடுவாரோ என்னும் ஆதங்கத்தில அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவே சென்னை வந்து கருணாநிதியைச் சந்தித்தார்.

இத்தகைய பலமான நிலையில் கருணாநிதி இருந்த போதும் இலங்கைப் பிரச்சனையைத் தீர்ப்பதில் அவர் வெற்றிபெறவில்லை.

## வேடிக்கை

தற்போது திராவிட முன்னேற்றக் கழகம் தனது பதினெட்டுப் பக்கத் தேர்தல் அறிக்கையில் ஒரேயொரு கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போல அதிகாரம் இருக்கும் போது எதுவும் செய்யாமல் அதிகாரம் போன பின்பு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்து தி மு. க. தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டது வேடிக்கையாக இருக்கிறது:

## இரட்டை வேடம்

இதேபோல் அ. தி. மு. க. வை எடுத்துக் கொண்டால் இலங்கைத் தமிழர் பிரச்னையில் தொடக்கத்திலிருந்தே தலையிட்டு வந்தவர் முன்னாள் முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன். அதன் பின்பு ஈழத் தமிழருக்கு ஆதரவாக குரல் கொடுத்த ஜெயலலிதா தி. மு. க. அரசைக் கலைக்க போராளிப் பிரச்னையையே பயன்படுத்தினர்.

---

## வழமைக்குத் திரும்புகிறது

(வேலணை)

தீவுப்பகுதியில் ஸ்ரீலங்கா ராணுவத்தினரால்மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த புங்குடுதீவு மக்கள் தற்போது மீண்டும் புங்குடுதீவுப் பகுதியில் குடியேறி வருகின்றனர். இங்கு வழமைபோல் வர்த்தக நிலையங்கள் திறக்கப் பட்டுள்ளன.

ஆலயங்கள் சகலதிலும் வழமைபோல நித்திய பூசை வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன. (75)

## படையினர் சூடு இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு ராணுவ முகாமிலிருந்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞரொருவர் படுகாயமுற்று, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பூநகரியில் வசிக்கும் விஸ்வலிங்கம் இரட்ணம் (19 வயது) என்பவரே காயப்பட்டவராவார். (56)

## மரத்தால் வீழ்ந்து காயம்

[யாழ்ப்பாணம்]

நுங்கு பறிப்பதற்காக உயரமான பனையில் ஏறிய 17 வயது இளைஞரொருவர் தவறி வீழ்ந்து படுகாயமுற்றநிலையில யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அளவெட்டி கிழக்கு கும்பளாவளையைச் சேர்ந்த கந்தையா சுரேஷ்குமார் என்பவரே தவறி வீழ்ந்தவராவார். (56)

ஃ ஃ ஃ

(மட்டக்களப்பு)

பாலையடிவெட்டை படுவான்கரையில் வீடு ஒன்றை 11ம் திகதி சுற்றி வளைத்து இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரட்ணராசா (வயது 37) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

## கல்விக் கதிர் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவின் வாராந்தர வெளியீடான கல்விக்கதிர் வெளியீட்டுவிழா யாழ். சாதனா சீ. சீ. த. க. பாடசாலையில் நாளை 14ம் தேதி முற்பகல் 11-00 மணிக்கு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

## ரூ. 2 ஆயிரம் கொள்வனவு

(புலோலி)

பருத்தித்துறை இலங்கை வங்கி கிளையில் வாடிக்கையாளர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது. மறு அறிவித்தல் வரை இக்கொடுப்பனவு இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (61)

## நாடகம்

(யாழ்ப்பாணம்)

கண்டி அரசன் நாட்டுக்கூத்து கடந்த சனிக்கிழமை மாலை 7 மணிக்கு பாஷையூர் ஆசிரியர் செபஸ்ரியன் அருந்தமிழ் அரங்கில் நடைபெற்றறது.

இதைத்தொடர்ந்து பாஷையூர் உதயதாரகை நாடகமன்றம் வழங்கும் பே. நேசனின் 'காலதேவனின் கடுந்தவம்' என்னும் போர்க்கால இசை நாடகமும் இடம்பெறவிருக்கிறது. (153)

---

# 'இலங்கைத் தமிழருக்கு உதவியதால் தி. மு. க. ஆட்சியை கலைத்தது நியாயமா?'

**- கலைஞர் கருணாநிதி**

(சென்னை)

இலங்கைத்தமிழருக்கு உதவி செய்த காரணத்தால் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது என்று திருப்பந்துார் காந்தி சிலைக் கருகில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் தி மு. க. தலைவர் திரு மு. கருணாநிதி கூறினர்.

திரு. கருணாநிதி, இலங்கைத் தமிழருக்கு உதவியதால் தி. மு. க ஆட்சியை கலைத்தது நியாயமா? என்று கேள்வி எழுப்பினர்.

அவர் மேலும் கூறியதாவது: நெருக்கடி நிலையை எதிர்த்ததால்முன்பு ஒருமுறை எமது தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டது: இப்போது இலங்கைத் தமிழருக்கு உதவி செய்ததால் ஆட்சி கலைக்கப் பட்டிருக்கிறது. நாங்கள் என்ன தவறு செய்தோம்.

ஆட்சி கலைக்கப்படும் என்று சொன்னபோதுகூட பிரதமராகவிருந்த திரு. ஆர். சந்திரசேகர் வதந்திகளை நம்பாதீர்கள். நான் ஜனநாயகவாதி; தமிழ்நாட்டில் நன்றாக நிர்வாகம் நடப்பதை கேள்விப்பட்டேன் என்றார். பின்னர் ஆளுநர் அறிக்கையில்லாமலே தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டது.

நடைபெறப் போகின்ற இந்த தேர்தல் இன்னும் 3 ஆண்டுகள் கழித்து நடைபெறவேண்டிய தேர்தலாகும். உங்களுடைய ஆதரவினால் ஆட்சிக்கு வந்த தி. மு. க. ஆட்சி இரண்டு ஆண்டு காலத்தில் கலைக்கப்பட்டுவிட்டது. ஒரு சிலரின் எரிச்சல் காரணமாகவும் தாங்கள் ஆட்சிக்கு வரவேண்டுமென்ற அவசரம், ஆத்திரம் காரணமாகவே எமது தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டிருக்கிறதேதவிர வேறு எந்தக் காரணமுமில்லை.

மே தினத்தில் சென்னையில் ஆரம்பமான எமது சுற்றுப் பயணம் பல மாவட்டங்களில் நடந்துள்ளது.

இப்பயணத்தின்போது விவசாயிகள், தொழிலாளர்கள், தாய்மார்கள், பாட்டாளி மக்கள், மாணவர்கள் காட்டுகின்ற எழுச்சியைப் பார்க்கும் போது நமது அணி வெற்றி பெறும் என்பது தெரிகிறது;

**தேர்தல் பயணத்தின்**

**விவசாயிகள், பாட்டாளிகள்,**

**மாணவர்கள், தாய்மார்கள்**

**காட்டுகின்ற எழுச்சியைப்**

**பார்க்கும்போது நமது அணி**

**வெற்றி பெறும் என்று**

**தெரிகிறது.**

நான் செல்லுகின்ற இடத்தில் எல்லாம் காணுகின்ற காட்சிகளைப் பார்க்கும்போது கிஞ்சித்தும் இடமில்லாமல் நமது அணியின் வெற்றி பிரகாசமாகவுள்ளதைக் காண்கிறேன்.

ராஜீவ் காந்தி இல்லாவிட்டால் வி. பி. சிங்தான் பிரதமர் என்ற தெளிவான விடயம் இன்று கிடைத்திருக்கிறது. ராஜீவுக்கும் வி. பி. சிங்குக்கும் உள்ள தனிப்பட்ட குணதிசயங்களைவிட முக்கியமான வித்தியாசம் என்னவென்றால் மாநில அரசுகளை மதிக்கத்தெரிந்தவர் வி. பி. சிங்.

கடந்த 6 மாதத்துக்குமுன்புகூட ஜனாதிபதி வெங்கட்ராமன் வரும்போது நிறுவனத்துக்கு தமிழக அரசு பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதுபற்றி நடவடிக்கை எடுங்கள் என்று என்னிடம் சொன்னார். நானும் அதுபற்றிப்பேசி அரசு நிறுவனத் தொகையை அரசின் சார்பில் அனுப்பிவைத்தேன்.

இதுகுறித்து வெங்கட்ராமன் 'நீங்கள் விரைவாக முடிவுகளை எடுக்கிறீர்கள் என்பதை கேள்விப்பட்டிருக்கிறேன். அதனை நேரிலே கண்டு கொண்டேன்' என்றார். பின்னர் ஆளுநர் அறிக்கையில்லாமலே அவர் எமது ஆட்சியைக் கலைத்தார். நாங்கள் செய்த தவறு என்ன என்பதற்கு மக்கள்தான் நியாயம் வழங்க வேண்டும்.

## தமிழ்நாடு தேர்தல் களம்

---

# வெண்டியின் புதிய பல பயன்கள்!

வெண்டி ஒரு பிரபல்யமான மரக்கறிப் பயிராகும். வெண்டிக்காய் உற்பத்தியின் போது சந்தைத் தேவைக்கு அதிகமான இளம் வெண்டிக் காய்கள் மற்றும் முற்றிய வெண்டிக்காய்கள் தேவையற்ற பொருளாகவே கணிக்கப்பட்டு வருவது வழமையாகின்றது.

ஆனால் நன்கு முற்றிய வெண்டிக்காய் வித்திலிருந்து உற்பத்திசெய்யப்படும் எண்ணெய், எள்ளு, ஆமணக்கு, மற்றும் சோயா அவரை, நிலக்கடலை, சூரியகாந்தி எண்ணெய்களுடன் வர்த்தக ரீதியில் போட்டி போடக்கூடியதாய் உள்ளதென்று கண்டறியப்பட்டுள்ளது.

வெண்டி (எம். ஐ. 5, எம். ஐ 7 இனங்களின்) விதையிலிருந்து கோப்பியும் தயாரிக்கலாம்.

இது சோயா அவரையில் இருந்து தயாரிக்கப்பட்ட கோப்பியைப் போன்று சுவையுடையதாக காணப்படுகின்றது.

இதைவிட காய்கள் அறுவடையின் பின் உபயோகம் அற்றதெனக் விடப்படும் அடிக்கட்டையில் இருந்து நாரைப் பெற்றுக்கொள்ளலாம். இவற்றிலிருந்து கயிறுகள் வலைகள் ஆகியவை தயாரித்துக் கொள்ளலாம்.

— தமிழீழ ஆய்வு நிறுவனம்.

# மடு அகதிமுகாமில் அகதிகள் தொகை அதிகரிக்கிறது

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளை தொடர்ந்து இறம்பைக்குளம், பம்பைமடு, பூவரசங்குளம், பனிக்கன்நீராவிக்குளம் போன்ற இடங்களிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து, பேசாலை, மடு அகதி முகாம்களில் தங்கியுள்ளனர்.

மடு அகதி முகாமில் 28 ஏப்ரல் மாதத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் தங்கியிருந்தனர் தற்போது இத்தொகை, 30 ஆயிரத்திற்கு மேல்அதிகரித்துள்ளது

2,000 அகதிகள் வவுனியா மாவட்டத்தில் இருந்து மடுவுக்குச் சென்றுள்ளனர்.

பேசாலையில் 14 ஆயிரமாக இருந்த அகதிகளின் எண்ணிக்கையும் தற்போது அதிகரித்துள்ளது.

மடு அகதி முகாமில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடி, உணவுப் பஞ்சம் போன்றவை அங்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. [56]

## காரைநகரில் ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நேற்று முன்தினமிரவு சரமாரியான துப்பாக்கிப் பிரயோகமும், ஷெல் தாக்குதலும் இடம்பெற்றுள்ளது.

இரவு 8-15 மணியளவிலிருந்து 8-35 மணிவரை சரமாரியாக துப்பாக்கிச்சூடு கேட்டதுடன், 3 ற்கும் மேற்பட்ட ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. இச்ஷெல்கள் எங்கு வீழ்ந்து வெடித்தன என்பது பற்றி எதுவும் தெரியவில்லை.

இதேவேளை நேற்றுக் காலை வலந்தலை சந்தியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் பொன்னாலையில் வீழ்ந்து வெடித்துள்ளன. [சி]

# வடக்கில்ராணுவநடவடிக்கை தீவிரம்!

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினர் வட மாகாணத்தில் தாக்குதல்களைத் தீவிரப்படுத்திவரும் அதேவேளையில், ஜூன் மாதம் முதல் இலங்கை அரசு புலிகளுடன் பேச்சுவார்த்தையைத் தொடரலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் அரசாங்கம் எதிர்பார்ப்பதுபோல், இராணுவத்தால் புலிகளைப் பின்னடையச் செய்துவிடமுடியாது என்றும், பேச்சுக்களுக்கான சந்தர்ப்பம் இன்னும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## விபத்து மரணம்

(வவுனியா)

கனகராயன் குளத்தில் வாகன விபத்தொன்றில் சிக்கி மரணமான வசமன் சந்திரபாலனுக்கு தர்மபுரம்) விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்தனர். (வி)

## 237 உள்ளூராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களை மட்டுமே பெற்றது.

இறுதித்தேர்தல் முடிவுகள் நேற்று மாலை 4-52 மணியளவில் அறிவிக்கப்பட்டது கடுகண்ணாவைத் தொகுதியில் ஐ. தே. க. போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டதால் 236 இடங்களுக்கு மட்டுமே தேர்தல் நடைபெற்றது.

இத்தேர்தலில் பெரும்பாலும் கிராமப்புற மக்களே ஐக்கிய தேசியக்கட்சியை ஆதரித்து தமது வாக்குகளை அளித்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மொத்த உள்ளூராட்சி சபைகளுக்கு நடைபெற்ற தேர்தலில் வெற்றியீட்டிய கட்சிகளின் விபரம் வருமாறு:

மாநகரசபைகள் 10: ஐ. தே. க- 09, ஸ்ரீ.ல.சு.க- 01;

நகரசபைகள் 32. ஐ. தே. க- 27, ஸ்ரீ. ல. சு. க- 02, சுயேட்சை- 02, கம்யூனிஸ் கட்சி- 01,

பிரதேசசபைகள் 195: ஐ. தே. க- 154, ஸ்ரீ.ல.சு.க- 33, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்-02, மக்கள் ஐக்கிய முன்னணி- 02 இ. கம்யூனிஸ் கட்சி-02, சுயேட்சை-02 (வி)

## குன்றக்குடி அடிகளாருக்கு விருது!

(சென்னை)

கிராம மக்களுக்கு உதவும் வகையில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களை வளர்ப்பதில் கடந்த 85-ம் ஆண்டு முதல் 89 வரை அரிய சேவை ஆற்றியமைக்காக குன்றக்குடி அடிகளாருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

புதுடில்லியிலுள்ள தேசிய அறிவியல் மற்றும் தகவல் தொடர்பு கவுன்ஸில் இந்த விருதுகளை வழங்கியுள்ளது.

## உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில்...

| | மாநகர சபைகள் | நகர சபைகள் | பிரதேச சபைகள் | மொத்த இடங்கள் |
|---|---|---|---|---|
| ஐக்கிய தேசியக்கட்சி | 09 | 27 | 154 | 190 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி | 01 | 02 | 33 | 36 |
| சுயேட்சைக் குழுக்கள் | — | 02 | 2 | 4 |
| இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி | — | 01 | 2 | 3 |
| மக்கள் ஐக்கிய முன்னணி | — | — | 2 | 2 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | — | — | 2 | 2 |
| மொத்தம் | 10 | 32 | 195 | 237 |

## தமிழகத்தில் வீடியோ பிரசாரம்

(சென்னை)

தமிழகத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கையில், தற்போது வீடியோப் படப் பிரசாரம் முக்கியத்துவம் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுவரொட்டிகள் மற்றும் பழமையான பிரசார நடவடிக்கைகளைக் கைவிட்டு, நவீன பாணியிலான வீடியோ, ஒடியோ கசெற்றுற்றுக்களைத் தமது பிரசார நடவடிக்கைகளுக்கு வேட்பாளர்கள் பயன்படுத்தி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பங்களாதேஷில் மீண்டும் சூறுவளி?

[டாக்கா]

பங்களாதேஷில் மீண்டும் கடும் சூறுவளி ஏற்படும் அபாயம்நிலவுவதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

சிட்டகொங் நகருக்கு தெற்கே அந்தமான் தீவுக்கருகே தாழமுக்கம் நிலைகொண்டுள்ளமையே சூறுவளி ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளமைக்கு காரணம் என வானிலை அவதான நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளையில் பங்களாதேஷில் சூறுவளி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இந்தியப் பிரதமர் திரு சந்திரசேகர் விஜயம் செய்துள்ளார்.

ஒரு லட்சத்து 38 ஆயிரம் பேர் இங்கு சூறுவளி அனர்த்தத்திற்கு பலியாகியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [க]

## அரசியல்வாதிகளை கடத்திய நக்ஸலைட்டுக்கள் விடுதலை

[புதுடில்லி]

ஆந்திரப் பிரதேசத்தில் காங்கிரஸ் [ஐ] கட்சி எம். எல். ஏ.யையும் இன்னொரு முக்கிய அரசியல் பிரமுகரையும் கடத்திச் சென்றுள்ள நான்கு நக்ஸலைட்டுக்களும் நேற்றுப் பிற்பகல் விடுதலை செய்யப்பட்டனர்.

கடத்திச்செல்லப்பட்ட எம். எல். ஏ யும் மற்றைய நபரையும் விடுவிப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறும் நிலையை அடைந்ததை அடுத்தே 4 நக்ஸலைட்டுக்களும் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (க)

## காரைநகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரமுடியாத நிலையிலும் இவர்கள் பற்றிய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

தமது உறவினர்களின் நிலை பற்றி அறிய நூற்றுக்கணக்கானோர் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துடன் பல தடவைகள் தொடர்பு கொண்டுமுள்ளனர். எனினும் இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

தற்போதும் பலர் தினமும் தமது உறவினர்களை எதிர்பார்த்து பொன்னாலைச் சந்தியில் காவலிருந்து வருகிறார்கள். [சி]

## மலையகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரஸ் 29 ஆயிரத்து 104 வாக்குகளைப் பெற்று 15 இடங்களையும் சுயேட்சைக்குழுக்கள் 7 இடங்களையும் ... பபற்றின. [ ]

## வாக்களிப்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றுத்தல் போன்ற தேர்தல் சட்டமீறல்களே இந்த வாக்களிப்பின்போது இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் வன்முறையில் ஈடுபட்டமைக்காக 56 பேர் இதுவரையும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ரி)

## படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் இக்குளத்திலிருந்து நீரைப்பெற்று விவசாயம் செய்துவந்த விவசாயிகளுக்கும் இக்குளத்திலிருந்து நீர்வழங்க இராணுவத்தினர் தடைவிதித்ததோடு, நீர் செல்லும் தடுப்புகதவின் திறப்பையும் அபகரித்துள்ளனர்.

படையினரின் இந்நடவடிக்கையினால் காலபோக பெரும்போகநெல்விளைச்சல் பாதிக்கப்படுவதோடு பெருமளவுவயல் நிலங்கள் பயிர் செய்யப்படமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. [க-வி]

## 33 குடும்பநல சேவையாளருக்கு பயிற்சி

(காங்கேசன்துறை)

இணுவிலில் செயற்படும் தெல்லிப்பழை சுகாதார பயிற்சி நிலையத்தில் 6 மாத கால வெளிக்களப்பயிற்சியைப் பெறுவதற்காக 33 குடும்ப நலச் சேவையாளர்கள் வந்து சேர்ந்துள்ளனர்.

இப்பயிற்சிக்கு 47 குடும்பநல சேவையாளர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தபோதும் இராணுவ நடவடிக்கையால் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து பயிற்சியாளர்கள் வந்துசேரவில்லையெனவும் பயிற்சி ஆரம்பமாகியுள்ளதால் அவர்களையும்தாமதிக்காமல் வந்து கலந்துகொள்ளுமாறும் போதனாசிரியர் கோரியுள்ளார். [86]

## இலங்கை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அமைதி காக்கும் படையை இலங்கையின் தற்போதைய அரசு திருப்பி அனுப்பி அனுப்பியதும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை பிரேமதாஸாஅரசு உதாசீனப்படுத்தியதும், இந்திராகாங்கிரஸ் கட்சிக்கு தீராத வடுக்களை ஏற்படுத்தியுள்ளன.

இதனால் இலங்கை அரசுடன் எதிர்ப்புணர்வைக் கொண்டுள்ள ராஜீவ் காந்தியும், விடுதலைப் புலிகளும் நண்பர்களாகலாம் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## கொழும்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுயேட்சை குழு I லிருந்து 17 அங்கத்தவர்கள் மேற்படி மாநகரசபைக்கு தெரிவாகியுள்ளனர்.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியிலிருந்து 3 அங்கத்தவர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து 2 அங்கத்தவர்களும், நவசமசமாஜக் கட்சியிலிருந்து ஒரு அங்கத்தவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## தேர்தல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படி நடவடிக்கை இலங்கையின் உள்விவகாரத்தில்தேவையில்லாமல் தலையிடுவதாக ஆளும் ஐ. தே. கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளையில் திக்வெல தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எச். ஆர். ஜயகிறி நாடாளுமன்றத்தில் பிரிட்டிஷ் தூதர் திரு. கிளாஸ் ரோல்போதைவஸ்துகடத்தல் காரர்களுக்கு உடந்தையாக இருக்கிறாரென நாடாளுமன்றில் காரசாரமாக விமர்சித்ததற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே பிரிட்டிஷ் தூதர் மேற்படி குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளதாக ஐ. தே. கட்சியினர் கருத்து வெளியிட்டுள்ளனர். [க]

## தமிழர் பிரச்னைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தனது கட்சிக்குப் பெருவாரியான வெற்றி கிடைத்திருப்பதால் வடக்கு-கிழக்குப் பிரச்சனையைச் சுமுகமான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைப்பதற்கான ஒரு தீர்க்கமான முடிவை ஜனாதிபதியால் இப்போது எடுக்கமுடியும்.

வடக்கு-கிழக்குப் பிரச்சனையை இராணுவநடவடிக்கை மூலமாகத் தீர்ப்பதைத் தவிர்த்து, சுமுகமான பேச்சுவார்த்தை மூலம் சமாதானமான முறையில் தீர்த்து வைக்கவேண்டும் என்ற தமது விருப்பத்தை ஜனாதிபதி நாட்டின் பல [illegible] லும், பல தரப்பட்ட மக்களிடையேயும் தெரிவித்திருக்கிறார்.

இப்போது கிடைத்திருக்கும் தேர்தல் வெற்றியானது இதைநிறைவேற்றிக் கொள்ள அவருக்கு நல்லதொரு சந்தர்ப்பத்தை கொடுத்திருப்பதாகவும் அரசியல் அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## நால்வர் கைது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கவில்லை

தம்பிராசா குமரேசமூர்த்தி (வயது 25) 35ம் கட்டை, சமரவிக்கிரம் அரியரத்தினம் [காக்காச்சிவெட்டை), தம்பிப்பிள்ளை பேரின்பம் [வயது 20] காக்காச்சிவெட்டை, கணபதிப்பிள்ளை சிவலிங்கம் (வயது 20] காக்காச்சிவெட்டை ஆகியோரே இராணுவத்தால் கைசெய்யப்பட்டவர்களாவர். (க)

## புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்புலிகள் சென்று கொண்டிருந்தபோது களப்பு பகுதியில் இராணுவத்தை எதிர்கொண்ட புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொண்டனர் இதில் படையினருக்கு ஏற்பட்ட சேதம் பற்றி எதுவும் தெரியவில்லை.

இம்மோதலில் வீரவேங்கைகளான பவான் [தம்பிலுவில் ஆனந் (தம்பிலுவில்) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Regsstetcd as a News Paper at the General Post office ri Lanka under licenee numper B/163506/31.